புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது

# இந்துசாதனம்

ஸ்தாபிதம் (1889)

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | வருஷம் 1-க்கு | ரூ. | 5-60 |
| வெளியூர், இந்தியா: | " | ரூ. | 9.40 |
| தொலைவாய்ப்பகுதி: | " | ரூ. | 9.40 |
| தனிப்பிரதி: | | சதம் | 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ரூ. | 9-4 |
| " | அரைக்கலம் | ரூ | 5-0 |
| " | கால்கலம் | ரூ | 3 15 |
| " | ஒரு அங்குலம் | சதம் | 65 |

அடுத்த முறைகட்கு வேறு விகிதங்களின் பாதி விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிப் பிரசுரிக்கப்படா

புத்தகம்—௩௯. } யாழ்ப்பாணம்:—விபவஹு வைகாசிமீ ௪௳ (1928 மேமீ 17) வியாழக்கிழமை. { இலக்கம்—அ௬.

உ
கணபதிதுணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவமபூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரமபூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானளித்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலெனமூன்று
மதம்பூத்தவிநாயகனருள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதைச் சனவைபரத்தில் உலகத்தவர்களுக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகர, பிதாளு, சாலாமூஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதமபருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகபூ வங்கபஸ்பம், அபரக்பஸ்பம, பவளபபஸ்பம், வெள்ளிபஸ்பம, அயகாந்த செந்தூரம சாமபிராணிப பதங்கம் இன்னும அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, அருவருத்தல் உண்டாயிருக்கும பக்கவாய்வு, இருமல், காசம பித்தகாமாலே, பித்தபாண்டு, பீனிசம, கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாயவு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற் சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலே ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ௦. அரைரூத்தலுக்கு ரூபா க௦. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பி. சட்டம் இல்லாததினுல் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலே
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

## கௌரவ லேர் பொன் இராமநாதனவர்கள் இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரை நடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா 2 அணு 8.
2. பகவத்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலே,
(H 64) சுன்னுகம், யாழ்ப்பாணம்.

## ஜாதக விளம்பரம்.

ஜாதகபலன் அறியவிரும்புவோர் ஜாதகக் குறிப்பையாவது, அல்லது பிறந்த வருஷம், மாதம், திகதி, கிழமை, நேரம், ஆண், பெண், பிறந்த ஊர் இவைகளைத் தெளிவாக எழுதி அனுப்பித் தற்கால பலன் அறிய ரூபா 1—00

ஜாதகக் குறிப்புக்கள் ரூபா 1, 2, 7, வரையிலும், ஜாதகங்கள் 10 ரூபாய் முதல் 150 ரூபா வரையிலும் எழுதிக்கொடுக்கப்படும்.

ஆருடம் ஞாயிறு வியாழக்கிழமைகளில் சொல்லுவோம. கடித மூலமாய் அறிய விரும்புவோர் கடிதம் எழுதும் நேரத்தைக் குறிப்பிட்டு எழுதவும், மூன்றுகேள்விகளுக்குட்பட ரூபா 1. மேற்பட்ட ஒவ்வொருகேள்விக்கும் சதம் 25 (அணு 4.)

மற்றும் விபரங்கள் கடித மூலமாயறிந்து கொள்ளலாம். பதில் வேண்டுவோர் முத்திரை (ஸ்டாம்பு) அனுப்புதல் வேண்டும்.

விலாசம்:—
க. கனகசபை,
சோதிடர்,
அன்னசத்திரத்தடி,
கந்தர்மடம்,
(Q. 101.) யாழ்ப்பாணம்.

## திருவாலங்காட்டுத் தேர்த் திருப்பணி.

—:0:—

மூர்த்தி தலம் தீர்த்தம் வாய்ந்ததும், பஞ்ச சபைகளுள்ளே ரத்தினசபையை உடையதும், சமயகுரவர், காரைக்காலம்மை, அருணகிரிநாதர், பட்டணத்தடிகள் முதலிய மகான்களின் பாடல் பெற்றதும் ஆகிய திருவாலங்காடென்னும் வடாரணிய க்ஷேத்திரத்திலே நெடுகாள் ரதமின்றி யிருந்தமையால், திருவருளை முன்னிட்டு ஓர் ரதத்தை நூதனமாயமைக்க ஆரம்பித்து இலங்கைவாசிகள் உபகரித்த பணத்தைக்கொண்டு அத்தேசத்திலுள்ள அருமையான மரங்களும் சிமை இருசு (அச்சு) களும் தருவித்து, இதற்கென அமைக்கப்பெற்ற தகரக் கொட்டகையிலே, பிரபவஹு கார்த்திகைமீ கஅ௳ நிகழ்ந்த சுபதினத்திலே முகூர்த்தஞ்செய்து இதுவரை சதுரப்பட்டடை மட்டம் வேலே நிறைவேறிவருகிறது. இத்திருப்பணி நன்கு பூர்த்தியாக இன்னும் நாற்பதினுயிரம் ரூபா வரையில வேண்டியதாயிருப்பதால் சிவநேயச் செல்வர்களனைவரும் தங்கள் தங்களால்இயன்ற பொருள் உதவி இத்திருப்பணியை இனிது முற்றுவித்து வடாரண்யேஸ்வரபெருமானுரது திருவருளைப்பெறும்வண்ணம வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
சச்சிதானந்தராஜயோகி,
(T S W Y Swamy.)
திருவாலங்காடு (போஸ்ட்)
விபவஹு சித்திரைமீ கஉ௳
(Q.102.)

## காணி விற்பனவு.

வாழைத் தோட்டம் எனப்படும் 100 பரப்புக் கொண்ட நிலம். முழுவதும் தென்னந்தோட்டம். பழைய புகைரத ஸ்தானத்திலிருந்து ½மைல் தூரத்திலுள்ளது. விபரமறிய விரும்புவோர் எமக்குத் தெரிவிக்கவும்.

V. வல்லிபுரம்,
கந்தர்மடம்.
(M. 64.) யாழ்ப்பாணம்

## வெற்றிலே! வெற்றிலே!! வெற்றிலே!!!

வியாபாரிகளே! உங்களுக்கு வெற்றிலே தேவையானல் கீழ்க்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதுங்கள். இலங்கையிலுள்ள மிகவுந் திறமான வெற்றிலே இங்கே மிக மலிவான விலைக்குக் கிடைக்கும. எந்தத் தினிசான வெற்றிலேயும் இலங்கையிலுள்ள எந்த இடங்களுக்கும் புகைரதமூலமாக எப்பொழுதும் அனுப்பலாம. விசேஷமாகக் கலியாணவீடு மற்றும் கொண்டாட்ட தினங்கள் முதலியவற்றிற்கு வெற்றிலே அனுப்புவதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக விருக்கிறோம். சென்ற 36 வருஷங்களாக இலங்கையிலுள்ள பல பாகங்களிலும் மிகவும் திருப்திகரமான வியாபாரஞ் செய்திருக்கிறோம.

எமது விலாசத்திற்கு ஒரு தந்தி மணி ஓடர் சமீபமான புகைரதஸ்தானத்தைக் குறிப்பிட்டனுப்பினுல் அடுத்த புகைரத மூலமாகவே வெற்றிலே யனுப்புவோம. அயலூர்களுக்கே எந்தக்காலமும் நாங்கள் வெற்றிலே அனுப்பிப் பெரிய வியாபாரஞ் செய்துவருகிறோம். ஒருமுறை எங்களிடத்தில் நீங்கள் வெற்றிலே வாங்கினுல் பின் வேறேரிடத்திலும் வாங்க மாட்டீர்கள். இது திண்ணம! எங்கள் தந்திவிலாசம் ஆக இரண்டு சொற்களே யுடையன.

மற்றும் விபரங்களுக்கு எழுதவும்.

S. P. A. மகிறிஸ் அப்புகாமி,
கம்பகா.
S. P. A. Magiris Appuhamy,
Gampaha - W. P

தந்தி விலாசம்:—
மகிறிஸப்புகாமி,
கம்பகா.
Tel. Add:—"Magrisappuhamy",
(H. 62) Gampaha,

## வியாபாரத்தில் விர்த்தியடைய விருப்பமா?

இந்தப் புத்தகத்தை வாசியுங்கள்.

ஒவ்வொரு வியாபாரியும் தொழிற்சாலை அதிபரும் முதலாளியும் தங்கள் தங்களுக்கு உகந்தபடி விளம்பரவழியைத் தேடிக் கொள்ளவும், அதின்படி சுருக்கமான செலவில் சிறந்த விளம்பர சகாயத்தைப் பெற்று வியாபார விர்த்தியை யடையவுந் துணையான நூல்.

## வியாபார விர்த்தி விளம்பர யுக்தி.

தமிழில்முதற்பதிப்பு
விலேரூபா 1
தபாற்கூலி அணு 4
முற்பணம்அனுப்புக.

தமிழில் இதுவரை வெளிவராத அரிய நூதன விளம்பர விஷயங்களைத் தாங்கிவரும். நவீன விளம்பர வித்தை விற்பன்னர் ஒருவரால் இனிய எளிய தமிழில் எழுதப்பட்டது. 6¾×4½ அங்குல அளவுள்ள 200 பக்கங்கள், அழுத்தமான காகிதப் பதிப்பு வைகாசி மாதம் வெளிவரும்.

Modern Publicity Company.
மாடர்ன் பப்ளிசிடி கம்பெனி,
15 அரண்மனைக்காரத்தெரு,
(Q. E. X.) சென்னபட்டினம்.

## தங்கப்பவுண் அடையாள மிடப்பட்ட கொளுக்கி ஓடுகள்.

இலங்கையில் இதுவே திறமான ஓடாக மதிக்கப்பட்டுவருகிறது. இது மிக உரமானது; நீடித்திருக்கத்தக்கது; அழகானது; எல்லாரும் இதனேயே விரும்புகிறார்கள்.

காரணம்:

இந்தச்சாதி ஓடுகளின் விசேஷம் அநுபவத்திற் கண்டது. இந்த ஓட்டைநாங்கள் இங்கே தருவித்தபின் இதனை எல்லாரும் வாங்கி உபயோகிக்கின்றனர். ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள். ஓடுகள் யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எங்கள் பண்டசாலேயிலும், பருத்தித்துறையிலுள்ள எங்கள் பண்டசாலேயிலும் பெற்றுக்கொள்ளலாம்.

S. வீரகத்திப்பிள்ளை,
(Q. 100) தொண்டமானறு.

## சமய சந்தேகம் ஏன்?

இந்தியாவிலும் மற்றுங் கிழைத்தேசங்களிலுமுள்ள அநேகர் உபாதைப்படுகின்றார்கள்.

ஏனெனில் அநேகமான மருந்துகளில் மிருகக்கொழுப்புச் சேர்த்திருப்பதால் அவர்கள் அதைப் பயங்கரத்தோடு வெறுக்கின்றார்கள்.

மிருகக்கொழுப்புச் சிறிதுஞ் சேராத

## லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

என்னும் மருந்தினுல் உண்மையான சுகத்தை யடையலாம்.
இந்துக்களாயினுஞ்சரி மகமதியர்களாயினுஞ்சரி
கிறிஸ்தவர்களாயினுஞ்சரி புத்தர்களாயினுஞ்சரி எல்லோரும் நம்பிக்கையோடு உபயோகிக்கலாம்.

எவ்வித வலியையும் நோவையுந் தீர்ப்பதற்கு
இந்தியாவில்கைகண்ட மருந்து.

எல்லாரசாயனசாலைகளிலும் மருந்துக்கடைகளிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

(Y. 51.)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஹ
வைகாசிமீ சஉ வியாழக்கிழமை.

## சொல்விளம்பி
## சொற்பொழிவு.

சென்ற திங்கட்கிழமை வெளிவந்த நமது பத்திரிகைப் பிரசுரத்தில், வைகாசி 12உ சனிக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளியிற் கூடிய கள்ளுக்கூட்டத்தைப் பற்றிச் சில கூறப்பட்டன. இக்கூட்டம் பிரதிகூலமானதென்பதே இங்கு நேரிற் சென்று கூட்டத்திற் சமுகமாயிருந்தோர் சிலரின் அபிப்பிராயமாகும். இங்ஙனமாகவும் கொழும்புப்பத்திரிகைகளில் இக்கூட்டத்தைப்பற்றிய வாலாயங்கள் மிகவும் புனைந்துரைக்கப்பெற்று வெளிவந்திருக்கின்றன. கூட்டம் அநுகூலமானதென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணம் முழுவதும் அன்று முற்றவெளியிற் சமுகமாயிருந்ததென்னுங் கருத்துப்படவும் எழுதப்பட்டிருந்தது. இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் மிஸ்ரர் P. மோசஸ், J. T. சொலமன் காரியதரிசியாக நியமிக்கப்பட்டனர். மிஸ்ரர் A. P. தம்பையா என்பவரே இக்கூட்டத்தவரின் பிரதான நிர்ணயத்தைப் பிரேரித்தவராவர். இவர் பிரேரிக்கும்போது ஒரு சொற்பொழிவும் நிகழ்த்தினர். அச்சொற்பொழிவு மயக்கத்தோடே நஞ்சோடுங் கூடியதென்பது அதனைப் பத்திரிகையிற் படிப்போர்க்கு இனிது புலனாகும். பால் குடித்தவனுக்குப் பாலேப்பமுண்டு; கள் குடித்தவனுக்குக் கள்ளேப்பமுண்டு என்றபடி இச்சொற்பொழிவு குறித்த தம்பையா என்பவர் யாழ்ப்பாணத்தவரையும் யாழ்ப்பாணத்துள்ள பத்திரிகைகளையும் இங்குள்ள சட்டநிரூபணசனப்பிரதிநிதிகளையும் மிகவும் கேவலமாக விளங்கி மயங்கி நிற்கின்றாரென்பதைக் காட்டுகின்றது. இவர் சொற்பொழிவின் ஆரம்பத்திலேயே, முறிவு தறிவிற்குப் பத்துக்கட்டுவோர்போல், தங்கள் கூட்டத்தைப்பற்றிய விபரங்களைப் பெருப்பித்துப் பத்திரிகையில் வெளியிடுவதற்குக் கௌரவ ஸ்ரீ இராசரத்தினமவர்கள் மாறாய் நிற்பரென ஆருடஞ் சொல்லிப் பெரிதும் அஞ்சுகின்றார்

இனி யாழ்ப்பாணத்திலே தாங்கள் செய்யுஞ் செயற்கருஞ் செயல்களை எடுத்துக் காட்டுவதற்கான பத்திரிகைகளுமில்லை என்கிறார். யாழ்ப்பாணத்திலுள்ள எச்சமயப் பத்திரிகைகளும் தேச நன்மையின் பொருட்டு ஊக்கமாக உழைத்துவருவனவாகும், இக்கள்ளு முயற்சிதேசத்துரோகமான செயலாதலாலும் இங்குள்ள அபிமானிகளால் அதிக சிரத்தையோடு விலக்கப்பட்ட செயலாதலாலும் பத்திரிகைகளும் இதற்கு மாறாகவே நிற்கலாயின. கள்ளு விஷயத்திலும் மிஸ்ரர் தம்பையா இந்த ஊருக்குச் செய்யும் ஏனைய தீய விஷயங்களிலும் இங்குள்ள சனப்பிரதிநிதிகளும் பத்திரிகைகளும் பெரியோரும் தமக்குச் சார்பாக நிற்பரென மிஸ்ரர் தம்பையா காத்திருப்பது கின்ன பிராந்தியாமென அறியக்கடவர்.

ஸ்ரீ துரைசுவாமி, ஸ்ரீ சபாரத்தினம், ஸ்ரீ இராசரத்தினமென்னும் இந்த மூன்று கௌரவ பிரதிநிதிகளையும் குறித்த தம்பையாவென்பவர் சிறிதும் போசனை பயமின்றித் தேசத்துரோகிகளென்றும் நாட்டின் சத்துருக்களென்றும் கூசாதுபேசியிருக்கின்றார். இவர்பேச்சு அரிதட்டு ஊசியைப் பார்த்து உன்னிடத்தில் ஒரு துவாரமிருக்கின்றதெனச் சொல்வதுபோலவும், சந்திரனைப்பார்த்து நாய் குரைப்பதுபோலவுமன்றோ இருக்கின்றது. இந்த மூவரும் நற்குடிப் பிறந்தவர்கள்; கல்வியறிவோடு கூடியவர்கள்; அறிவுடையோரால் விரும்பப்படுபவர்கள்; தனபலம் வாய்ந்தவர்கள்; இங்குள்ளாரால் மதிக்கப்படுபவர்கள். நோய் பீடிப்பவனுக்குச் சர்க்கரை வேம்பாயும் மாங்காய் உவப்பாயுமிருத்தல் போலவும், கள்வனுக்கு நிலா வெறுப்பாயும் இருள் விருப்பாயுமிருத்தல் போலவும், மதுவுண்டு வெறிகொண்டவனுக்கு உலகம் சுழல்வதாகத் தோற்றுதல் போலவுமே இந்த மூவரும் இத்தம்பையாவென்பார் கண்ணுக்குப் புலப்படலாயினர்.

இத்தம்பையா தாம் யாரென்பதையும் இந்த மூவரும் யாரென்பதையும் சிறிது யோசித்திருப்பரேல், நல்லறிவோடு கூடியிருப்பரேல் இந்த விதமாக நமது பிரதிநிதிகளைத் தேசத்துரோகிகளென ஒருபோதும் சொல்லியிருக்கமாட்டார். குறித்த தம்பையாவைப்போல இந்த மூவரும் மன்னாரிலிருந்து கொண்டுவந்து யாழ்ப்பாணத்தில் இறக்குமதி செய்யப்பட்டவர்களல்லர். குறித்த தம்பையா மன்னாராலகற்றப்பட்ட பின் அங்குள்ளார் மிக்க ஆறுதலோடு கூடியிருக்கின்றார்களென்றும் மன்னார் பட்டபாட்டைச் சிலகாலமாக யாழ்ப்பாணம் படுகின்றதென்றும் விஷயமறிந்தோர் சொல்லுகின்றனர். இவர் இப்பொழுது தோளிலிருந்து செவியைக் கடிக்க முயல்கின்றார். இவர் தாம் பிழைப்பதற்காக மற்றவர்களை வசை சொல்லவும் ஊருக்குத் தீமையிடவும் நாட்டில் வேற்றுமைகளையுங் கலகங்களையும் உண்டாக்கி விடவும் முயற்சி செய்வாரானால், இங்குள்ள சனப்பிரதிநிதிகளும் மற்றும் அபிமானிகளும் ஒன்றில் இவருடைய முயற்சிகளுக்கு ஒருமுடிவு செய்யவேண்டும் இன்றேல் இவரை ஒதுக்கிவிடுதல் வேண்டும்.

தீமையான கருமத்திலும் ஒரு நன்மையிருத்தல் கூடுமென்ற பிரகாரம் இத்தம்பையாவின் சொற்பொழிவினால் ஒரு நன்மை ஏற்பட்டிருக்கின்றதெனலாம். சில குடிகாரர் மதுக்கடைகளைப் பழையபடி திறந்துவிடல் வேண்டுமென்று விரும்புகின்ற இச்சமையத்தில், மதுபானநீக்க அபிமானிகளும் சனத்தலைவர்களும் சிறிது அலட்சியமாகவிராது மிக்க ஊக்கத்தோடு வேலை செய்யும்படி தூண்டிவிட்டிருப்பது மிஸ்ரர் தம்பையாவுடைய பேச்சேயாகும்

## உலகம் பலவிதம்.

“என்ன முருகேசண்ணே, உம்மைக் கண்டு வெகுகாலம்; நான் உம்மிடம் வரவேண்டுமென்றிருந்தேன்; என்னுடைய அதிஷ்டம் நீரும் இப்படி வருகின்றீர்” என்றார் ஐயாத்தம்பி. “என்ன விசேஷம் தம்பி, உனக்கென்ன குறை, நீ பலவீட்டுச் செல்லப்பிள்ளை; உனக்கு இப்பொழுது எங்களைத் தேவையில்லை” என்று முருகேசு சொல்ல “அண்ணே, ஒருபோதும் இப்படிச் சொல்லவேண்டாம்; உங்களை எப்பொழுதும் எனக்குத் தேவையென்றுதான் நான் நடந்து வருகிறேன்; நீங்கள்தான் கேட்பார்புத்தி கேட்டு என்னை வெறுக்கப் பார்க்கிறீர்கள்; போனதெல்லாம் போகட்டும்; இப்பொழுது ஒரு கருமம் உங்களைக் கேட்கப் போகிறேன்; அது உண்மையோ வீண் கதையோ என்பதைக் கோபிக்காமல் எனக்குச் சொல்லிவிடுங்கள்” என்றார் ஐயாத்தம்பி. “உள்ளதைச் சொன்னாற் கோபமென்ன, தம்பி நீ ஒன்றையும் ஒளியாமற் சொல்லு” என்று முருகேசு வினவ, ஐயாத்தம்பி புகலுகின்றார்: “அண்ணே, எனக்கு இதைக் கேள்விப்பட்ட நேரந்தொடக்கம் மனவருத்தம்; நீங்கள் இந்தக் கள்ளுத்தவறணை திறக்கும் விஷயத்தில் எனக்கு மாறாக நிற்கிறீர்களாம்; அது மெய்தானா” “ஓம், மெய்தான்; அப்படித்தானே தம்பி நிற்கவேண்டியது; நீ சிறுபிள்ளைப் புத்திகொண்டு மதுவுண்டு கூத்தாடுகின்றாய்; போன சனியை மீட்டுங் கூப்பிடுவது புத்தியீனமல்லவா; நீ ஏன் இதிற் பிரவேசிக்கின்றாய்? உனக்கு ஏதும் வேணுமென்றால் அதைக் கண்டுகாணாமல் நடத்திக்கொள்; அதைவிட்டு உனக்கு ஒரு ஆளுக்காக ஊர் முழுவதையும் நீ கெடுக்காதே; பிறவூரிலிருந்துவந்த நீ, ஊரோடொக்க ஓடு என்றபடி இங்குள்ளவர்களோடு ஒத்து நடப்பதை விட்டு வீணாய் ஏன் பகைப்பட்டுத் திட்டுக் கேட்கிறாய்” என்று முருகேசு கூறினர்.

* * *

“அண்ணே, என்னைப் பிழையாக நீங்கள் விளங்கியிருக்கிறீர்கள்; தண்ணீர்ப் பஞ்சம் எனக்கில்லை; அது எந்த நேரமும் கிடைக்கும்; இந்த முயற்சியால் நமக்கு ஏதுங் கிடைக்கும் பாருங்கள்; அல்லாமலும் இதைச் சேர்ந்தவர்கள் என்னிடத்தில் மெத்த மதிப்புப் பாராட்டுகிறார்கள்; இனி உண்மையாகச் சொல்லுகிறேன், சிலர் கள்ளில்லாமற் காலங் கழிக்கமாட்டார்கள்; இந்தக் காங்கையானகாலத்திற்குக் கள்ளில்லாமற் செய்வதென்ன; அந்நியநாட்டுக்குடிவகை சாராயம் இப்படிப்பட்ட குடிவகைகளில் நாங்கள் தொங்கவில்லை; இது ஊரிலுள்ளது; ஊர்ப்பிறந்தவர்களுக்குத் தேவையானது; கள்ளுத் தவறணைகளை முந்தித் தவிர்த்ததும் கள்ளை முந்தியிருந்தவிதமாக ஒரு கட்டுப்பாடுமின்றிக் குடிக்கலாமென்று சொல்லித்தான்; சனங்கள் அதினாற்றான் அப்பொழுது கள்ளு வேண்டாமென்று சம்மதஞ் சொன்னார்கள்; இப்பொழுதும் கள்ளுத்தவறணைகளைத் திறப்பதற்கு மாறாக நாங்கள் வேலைசெய்தால் அது சனங்களை ஏமாற்றுவதாக முடியும். இனிக் கள்ளுச்சேர்த்துப் பிழைத்தவர்கள் எத்தனையோபேர் ஒரு முயற்சியுமின்றிச் சும்மா திரிகிறார்கள்; இவைகளொன்றையும் நீங்கள் யோசிப்பதில்லை. கள் என்றவுடனே வேண்டாம் என்றுவிடுகிறீர்கள்” என ஐயாத்தம்பி அதிக நியாயஞ் சொன்னார்.

* * *

“தம்பி, நான் சொல்லுவதையும் கொஞ்சம் ஆறுதலாகக் கேட்டு யோசித்துப்பாரும்; கள்ளு பஞ்சமாபாதகங்களுள் ஒன்று; இதனால் நமது நாட்டிற்கு நேர்ந்த தீமைகள் பல; மதுபானத்தினால் நேர்ந்த கொலைக்குக் கணக்கில்லை; கெட்ட குடிகளுக்கு எல்லையில்லை; இந்த மதுபானம் முற்காலத்தில் தாழ்ந்த வருணத்தாருக் கிடையிலேதான் நடமாடிவந்தது; ஆனாற் காலகதியில் இக்குடிவகை உயர்ந்த சாதியினரென இருப்போருள்ளும் போய்ப் பிரவேசித்துவிட்டது; பெண்கள்புறத்தும் போய்ப் புகுந்துவிட்டது; மானம் மரியாதைகளைக் கெடுத்துவிட்டது; இனி கருப்பநீரல்லாமற் கள்ளு ஒருபோதும் நம்மவர்களுக்கு உணவாக விருந்ததில்லை; வடமராட்சி முதலிய பகுதிகளில் இக்கருப்பநீரைக் கொண்டு பனங்கட்டி கல்லாக்காரமெனப்படும் பனங்கற்கண்டு முதலியன செய்து சீவித்த ஏழைகள் எத்தனையோ பேர் உண்டு. மதுபானம் அதிகப்படவே மரமேறிகள் கருப்பநீர் சேர்த்தலை விடுத்து அதிக பொருள் ஈட்ட நினைத்து கள்ளைச் சேர்க்கத் தலைப்பட்டே நாட்டிற் கலகத்தையும் தரித்திரத்தையும் உண்டாக்கி விட்டனர். இந்த வெய்யிற்காலத்திற்குக் கள்ளைக்காட்டிலும் கருப்பநீரல்லவா உவப்பாகவிருக்கும், ஊரவர்கள் இப்பொழுதும் அப்பொழுதும் கள்ளுக்கு மாறாகவே நிற்கின்றார்கள்; உன்னைப் போன்ற சிலர்தான் ஊருக்கு விரோதமாகவிருக்கின்றனர்” மேலும் மூக்கறையனொருவன் ‘மற்றவர்களையும் மூக்கறையராக்க முயன்றவாறு மதுவேட்கை கொண்ட நீங்கள் சிலர் ஊர்முழுவதையும் உங்களைப்போலாக்கல் முடியாத காரியம்; மதுநீக்க அபிமானிகள் உங்கள் ஊரைக் கெடுக்கும் உங்கள் முயற்சியைத் தடுப்பதற்குத்தான் இத்தமுறையும் கங்கணம் பூண்டு நிற்கின்றார்கள். அவர்கள் அநுகூலமடைவார்கள்; ஏனென்றால் அவர்கள் எடுத்துக்கொண்ட விஷயம் தருமகாரியமாகும்; தெய்வசகாயம் பெரியோருதவியெல்லாம் அவர்களுக்கு உண்டு” என்று முருகேசு சொல்ல, ஐயாத்தம்பி சினத்துடன் “சரி, நீங்களும் உங்களாற் செய்யக்கூடியதைச் செய்துபாருங்கள்; நாங்களும் எங்களால் இயன்றவரையிற் பார்க்கிறோம்” என்று சொல்லிவிட்டு முகங்கருகியபடி சென்றார்.

---

### காலநிலை.

வெயில் கடுமையாகஎறிக்கிறது. மழை இன்னும் பெய்யவில்லை ஊரில் பலவித நோய்கள் பரம்புகின்றன. இன்றைக்குக் காற்றுக் குறைந்திருக்கின்றது.

### அரசினரால் நடத்தப்படும்
### கிளறிக்கற் பரீக்ஷை.

அரசாங்க உத்தியோகத்தில், கிளறிக்கற் பகுதி 2-ம் வகுப்பில் சேர விரும்புவோருக்காக ஒவ்வொரு வருஷமும் ஆகஸ்ட் மாசத்தில் ஒரு பரீட்சை நடத்தப்படுமென அரசினர் ‘கஜற்’ பத்திரிகையில் விளம்பரஞ்செய்திருக்கின்றனர். இச்சோதனை 1928-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21உ நடைபெறும். விண்ணப்பப் பத்திரங்கள் 1928-ம் ஆண்டு ஆனிமீ 5உ பகல் 2 மணிக்கு முன் வித்தியாகர்த்தருக்கு அனுப்பப்படவேண்டும்.

### உடுவில் இந்து வாலிபர் சங்கம்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் நாகலிங்கசுவாமியவர்கள் “சித்திர குப்தன்” என்னும் விஷயத்தில் ஓர் சிறந்த பிரசங்கஞ் செய்தனர். ஆண் பெண் என்னும் இருபாலாருமாகப் பலர் சமுகமளித்தனர். நீர்வேலி ஸ்ரீ கந்தையாபிள்ளை பண்டிதர் அத்தருணம் குறிப்புரை கூறினர். ஸ்ரீ சாமையா அவ்விடத்தில் ஓர் சைவப் பெண்கள் சபை ஸ்தாபித்தல் அவசியம் என்றும், அதனால் வரும் பயன்களையும் எடுத்துக் கூறினர். 9 மணியளவில் கூட்டம் முடிந்தது.

### கொக்குவிலில்
### புதிய புகைரத ஸ்தானம்.

கொக்குவிலில் கொழும்பிலிருந்து 247¼ மைலில் ஒரு புதிய புகைரதஸ்தானத்தை ஸ்தாபிக்கத் நிர்மாணித்திருக்கிறார்கள். புகைரத ஸ்தானத்திற்கு வேண்டிய கட்டடங்கள் கட்டுவதற்கு 6 ஏக்கர் நிலம் வேண்டியிருக்கிறது. இதற்காக எட்டுத் துண்டு நிலங்கள் விலைக்கு வாங்கப்படும். தணக்கமரத்தடி என்று சொல்லப்படும் சுடுகாட்டிற்குச் சமீபத்திலேயே இப் புகைரத ஸ்தானம் ஸ்தாபிக்கப்படும்.

### அரசியல் விசாரணைச் சங்கத்தின்
### அறிக்கைப்பத்திரம்.

இலங்கை அரசியல் விஷயத்தை விசாரணை செய்த சங்கத்தாரின் அறிக்கைப்பத்திரம் குடியேற்றநாடுகளின்மந்திரிக்கு ஜூன்மாதக்கடைசியில் அனுப்பப்படுமென்றும், அந்த அறிக்கைப் பத்திரம் லண்டனில் வெளிவரும் அந்த நாளிலேயே இலங்கையிலும் வெளிவரவேண்டுமெனக் கேட்கப்படுமெனவுந்தெரிகிறது. ஆகையால், ஜூலாய்மாத நடுக்கூற்றில் இலங்கையிலும் லண்டனிலும் ஒரேகாலத்தில் இந்த அறிக்கைப்பத்திரம் வெளிவருமென எண்ணப்படுகின்றது.

### ஆலமரத்திலேறித்
### தப்பிக்கொண்டனர்.

சென்ற கிழமை முற்றவெளியிலுள்ள மண்ணெண்ணெய்க் குதத்திற்கு எதிரே ஓர் பயங்கரமான சம்பவம் நிகழ்ந்தது. யாழ்ப்பாணத்திலுள்ள படக்காட்சிச் சாலையிலே வேலையிலமர்ந்திருக்கும் வைத்தியலிங்க மென்பவரும் இன்னுமொருவரும் மேற்படி குதத்திற்கு எதிரிலுள்ள தெருவீதி வழியாகத் தங்கள் துவிசக்கரவண்டிகளிற் சென்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது எதிராக வந்த மோட்டாரதமொன்றுடன் இவர்கள் மோதுண்டார்கள். தப்பிக்கொள்ள வேறுவழியில்லாததினால் வைத்தியலிங்கம் தனது துவிசக்கரவண்டியிலிருந்து தெருவீதிக்கு மேலே நீண்டிருந்த ஓர் ஆலமரத்தின் கொப்பிற் பாய்ந்து மோட்டாரதத்தால் நெரிபட்டு இறந்துபோகாது தப்பிக்கொண்டனர்.

### உபந்நியாசம்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் சாயந்தரம் 6 மணி தொடக்கம் திருக்குற்றாலத் தமிழ்ப் பள்ளிக்கூடத் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் திரு. ப. சிங்காரவேற்பிள்ளை அவர்கள், சேக்கிழார் பெருமை, சுப்பிரமணிய பராக்கிரமம், தேவாரம், சிறுத்தொண்டர், அப்பர் அருள்நிலை என்னும் விஷயங்களில் உபந்நியாசஞ் செய்வாரெனவும், மேற்படி கல்லூரிச் சைவ மாணவர் சங்க அங்கத்தவர்கள் மேற்படி பண்டிதரைக்கொண்டு பலவிடங்களிலும், கண்ணப்ப நாயனார், திருவாசகமும் திருக்கோவையாரும், தமிழின்தெய்வீகம், அப்பர் அருள்நிலை, சிறுத்தொண்ட நாயனார், திருஞானசம்பந்தருடைய அற்புதங்கள், திருநீலகண்டநாயனார், அன்பு நிலை என்னும் விஷயங்களில் உபந்நியாசங்கள் செய்விக்க ஒழுங்கு செய்திருக்கிறார்களெனவும் அறியலானோம்.

### பிரயாணச் சீட்டின்றிச் சென்றோர்
### அபராதம் விதிக்கப்பட்டனர்.

நாவற்குழியிலுள்ள கந்தையா என்னும் ஒரு வாலிபன் புகைரதப் பிரயாணச் சீட்டின்றிப் புகைரதத்தில் ஏறினதற்காக ஒருவழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் தொடரப்பட்டு, எதிரிக்கு ரூபா 5 அபராதம் விதிக்கப்பட்டது. தேவசகாயம், மருசலி என்னுமிருவர் நாகம என்னுமிடத்திலிருந்து பிரயாணச் சீட்டின்றி யாழ்ப்பாணத்திற்குப் புகைரதத்தில் வந்தார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டார்கள். இருவருக்கும் தனித்தனி ரூபா 20 அபராதம் விதிக்கப்பட்டது. சப்பையா என்றுமொருவர் பிரயாணச் சீட்டின்றி மதவாச்சியிலிருந்து கொடிகாமத்திற்குப் புகைரதத்தில்வந்தாரெனக் குற்றஞ் சாட்டப்பட்டார். இவரைச் சோதித்துப் பார்த்தபொழுது, மடுவிலிருந்து மதவாச்சிக்கும், கொடிகாமத்திலிருந்து மதவாச்சிக்குமாகவுள்ள இரண்டு பிரயாணச் சீட்டுகள் இவரிடத்தில் அகப்பட்டன. இவருக்கு ரூபா 13—51 அபராதம் விதிக்கப்பட்டது.

### வெள்ளை யானை
### கொழும்புக்கு வந்தமை.

ஏதென் என்னுமிடத்திலிருந்து சென்ற 8உ செவ்வாய்க்கிழமை இரவு கொழும்புக்கு வந்த கப்பலில் ஒரு வெள்ளையானையும் வந்தது. இந்த வெள்ளையானையும் இன்னுமொரு கறுத்தயானையும் தென்னாபிரிக்காவிலிருந்து கல்கத்தாவிலுள்ள ஒருவருக்குக் கொண்டு போகப்படுகின்றன. வெள்ளையானைகள் அரிதாயிருக்கிறபடியால் இந்த யானைக்கு ஏராளமான பணம் செலவழிக்கப்பட்டிருக்குமெனக் கருதப்படுகிறது.

### ஒரு கண்ணுக்கு 5000 ரூபாய்.

கொழும்பு வார்வ்வெற் கம்பனியில் லொக்காக விருக்கும் மிஸ்டர் ஆபிரகாம் பெரேரா என்பவர் கொழும்பு நகரசங்கத்தாரின் வேலையாட்கள் கவனக்குறைவாக மூங்கில் தடிகளை டிராம் வண்டிப்பாதைக்குச்சமீபத்தில் வைத்து வேலைசெய்தபோது மேற்படி டிராம் வண்டியில் பிரயாணஞ்செய்த மேற்படி பெரேராவினது இடது கண்ணில் ஓர் தடிதாக்கி அதனைக் குருடாக்கிவிட்டதென்று நகரசங்கத்தின்மீது 5000 ரூபா நஷ்டத்துக்கு வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர்.

## கழுதைப் புலி.

கழுதைப் புலி சாதாரணமாக மலைப் பிரதேசங்களில் வசிக்கும். பார்வைக்குக் கழுதையையும், சுபாவத்தில் புலியையும் ஒத்திருக்கும் நாம் சந்தோஷமாயிருக்கும்போது சிரிப்பது போல அலறாமல், இந்த மிருகம் கோபமாயிருக்கும் பொழுதும் சிரிக்கும். சாதாரணமாய் ஆடு மாடுகளையும், சமையம் வாய்த்தால் மனிதனையும் அடித்துத் தின்னும். இந்த மிருகத்தின் கொழுப்பு முடக்கு நோய், கைகால் பிடிப்பு முதலிய வியாதிகளுக்குக் கைகண்ட ஔஷதம்.

---

## நீதிபதியே அபராதத்தை இறுத்தனர்.

பொலிஸ்தானத்திற்கு எதிரில் 12 வயதுள்ள ஓ' அநாதச் சிறுவன் குறும்பு செய்ததனை ஒற்றன் பொலிஸ்கோட்டில் குற்றஞ்சாட்டப்பட்டான். அவன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுதலும் நீதிபதி அவனுக்கு ரூபா 2-50 அபராதம் விதித்தார். அந்த அபராதத் தொகையை இறுக்கத் தனக்கு ஒருவருமில்லையெனவும், தான் ஒரு அநாதப்பையனெனவும் அவன் கோட்டில் கூறியபொழுது நீதிபதி அந்த ரூபா 2-50 ஐயும் தாமே கொடுத்து அவனைப் போகும்படி கூறினர்.

---

## நியாயவாதிக்கு மூன்றுவருடச் சிறை

"வான்றாயின் அன்ட் சுவான்" என்னும் பெயரோடு ஹற்றனில் நியாயவாதத் தொழில் நடாத்தியவர்களில் ஒருவரான மிஸ்ரர் V. L. ஸ. சுவான் என்பவர் வான்றாயின் என்பவரின் கையெழுத்தைக் கள்ளமாக ஒரு 'செக்'கிலும் ஒருகாகிதத்திலும் போட்டாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். இவ்வழக்கு, கொழும்புக் கிறிமினல் விசாரணைச் சுப்பிறீம் கோட்டில் விளங்கப்பட்டு நியாயவாதிக்கு மூன்று வருடக் கடூழியச் சிறை விதிக்கப்பட்டது. மிஸ்ரர் ஏ. எஸ். மெயின் என்பவர் பொய்ச்சாட்சி கூறியமையால் ரூபா 50 அபராதம் விதிக்கப்பட்டார்.

---

## பிரபு (லோட்) ஜின்னுவின் ஆஸ்தி.

காலஞ்சென்ற பிரபு ஜின்னு கல்கத்தாவில் வக்கிலாயிருந்து ஈட்டிய பொருளின் மதிப்பு ஒன்றரைக்கோடியாம். அவருடைய வாரிசாக பிரபுப் பட்டம் பெறும் மூத்த பிள்ளைக்கு 55 லக்ஷமும் மற்ற இரண்டு பிள்ளைகளுக்குத் தலைக்கு 20 லக்ஷமும், மற்றொரு பிள்ளைக்கும் அவரது மனைவியாருக்கும் மாதம் 4000 ரூபாய் படியும், மூன்று குமாரத்திகளுக்குத் தலைக்கு ஒருலக்ஷமும் தர்மத்திற்கு ஒருலக்ஷமும் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறாராம்.

---

## நீடிய ஆயுளுடைய தப்பதிகள்.

வடக்குத் திருவாங்கூரில் அங்கார் என்ற ஊரில் 140 வயது சென்ற ஒருவர் இன்னும் உடல் நலத்துடன் இருக்கிறாராம். 1809-ம்ஆ கர்னல் மன்ரோ திருவாங்கூரில் ரெசிண்டாயிருந்த காலம் இவருக்குத் தெரியுமாம். திருவாங்கூருக்கும் பிரிட்டிஸ் இந்தியாவுக்கும் எல்லை பிரித்த காலத்தில் 1810-ல் அதில் இவர் காடுவெட்டி வேலைசெய்யும் கூலியாளாக வேலை செய்தாராம். கர்னல் மன்ரோவிடம் இவர் சில காலம் சோக்ராவாகவும் இருந்தாராம். இவர் எண்பதாம் வயதுவரை சொன்னாண்டி என்ற பெயருடன் ஹிந்துவா யிருந்தாராம். பின் கிறிஸ்தவராகி ஏசு தாசன் என்ற நாமம் பெற்றாராம். இவருக்கு நூம்பது வயதில் கலியாணமான இவரது மனைவி இப்பொழுது 110 வயதுள்ளவளாயிருக்கிறளாம். இவருக்கு நாலு பிள்ளைகள் இருக்கின்றன.

---

## காயப்பட்டோர்க்கு நஷ்டஈடு.

பங்கோர் சர்வகலாசாலையில் படித்துக் கொண்டிருந்த விஷ்ணுசர்மா என்னும் மாணவனுக்கும், பிறிஸ்ரல்சர்வகலாசாலையில் படித்துக்கொண்டிருந்த ஒப்ராசின் என்னும் மாணவனுக்கும், லிவர்பூலிலுள்ள சுப்பிறீம்கோட்டாரால் முறையே 2000 பவுனும், 600 பவுனும் நஷ்டஈடாகக் கொடுக்கப்பட்டன. இவர்கள் இருவரும் இந்திய மாணவர். விடுதலை நாட்களுக்கு பிளாய்க்பூல் என்னுமிடத்திற்குப் போயிருந்து லிவர்பூலுக்குத் திரும்பிப் போகும்பொழுது அயின்றி என்னுமிடத்தில் ஒரு மோட்டார விபத்தில் காயமடைந்தனர். சர்மா அரசினர் உத்தியோகம் பெறமாட்டாதவனுகி விட்டனன். சிங் என்பவன் இப்பொழுது சிகிச்சை செய்யப்படவேண்டியவனுயிருக்கிறன்.

## பாரிஸ் நாகரிகம்.

பாரிஸில் கடைபோக ஏற்பட்டிருக்கும் புது நாகரிகம் முழங்காலுக்கு நகையணிந்து கொள்ளுதலாம். விலையுயர்ந்த வைரங்கள், இரத்தினங்கள் முதலியவை பொருத்தப்பட்ட தங்கப்பட்டிகளை பாரிஸ் மாதர் முழங்காலில் அணியத் தலைப்பட்டிருக்கிறார்களாம். அவர்கள் அணியும் பாவாடை வரவரக் குட்டையாகி வருவதால், நடனமாடும்போது மேற்படி முழங்கால் நகை மறைந்தும் வெளிவந்தும் ஒளி வீசுமாம். இம்முழங்கால் அணிகளில் சில லட்சக்கணக்கில் பெறுமதியுள்ளவையாம்.

---

## காதல்! அபாயம்!!

இத்தகைய கூக்குரல் இப்போது ஜெர்மனியிலுள்ள பிரித்தானிய போர்வீரர்கள் சம்பந்தமாகக் கிளம்பி யிருக்கிறது. ஜெர்மனியிடமிருந்து யுத்த நஷ்ட ஈடு வசூலிக்கும்பொருட்டு, ரைன் நதிப் பிரதேசத்தை நேசக்கட்சியார் கைப்பற்றி வைத்திருப்பதும், அங்கு பிரித்தானிய போர்வீரர்கள் காவல்புரிந்து வருவதும் நேயர்கள் அறிந்ததே. இந்தப் போர்வீரர் ஜெர்மனியப் பெண்களால் கைப்பற்றப்பட்டு வருவதே மேற்படி கூக்குரலுக்குக் காரணம். 1918-ம் ஆண்டிலிருந்து இதுவரை 690 பிரித்தானிய போர்வீரர் ஜெர்மானியப் பெண்களை விவாகம்செய்து கொண்டிருக்கிறார்களாம். சமீபத்தில் இன்னும் பல கலியாணங்கள் நடைபெறுமென்று தெரிகிறதாம். இங்கிலாந்தில் கலியாணத்துக்குத் தகுந்த கன்னிகைகள் பலர் இருக்கையில், ஆங்கில போர்வீரர் வெளிநாட்டுப்பெண்களை மணம் செய்து கொள்வதின் அபிப்பிராயத்தைப்பற்றிக் கூக்குரல் கிளம்பியிருக்கிறது. இது காரணமாகவே விரைவில் பிரித்தானிய படைகளைத் திரும்ப அழைத்துவிட வேண்டுமென்னும் யோசனையும் வற்புறுத்தப்படுகிறதாம். இது நடைபெற்றால், ஜெர்மானிய ஆண்மக்கள் பீரங்கி வலிகொண்டு செய்யமுடியாத காரியத்தை ஜெர்மனிப் பெண்கள் மன்மதனுடைய துணையினால் செய்து முடித்தவர்களாவார்கள்.

---

## வேகப் பைத்திய விபத்து.

மோட்டார் வேகப்பைத்தியத்தின் காரணமாக மிஸ்டர் பிராங் லாக்கார்ட் என்பார் பரிதாப மரணமெய்திய செய்தி கிடைத்திருக்கிறது. இதற்கு முன்பு 1927-ம் ஆண்டில் மேஜர் ஸிகிரேவ மணிக்கு 203 மைல் வீதமும், 1928-ல் காப்டன் காம்பெல் மணிக்கு 206 மைல் வீதமும், ரேகீச் என்பார் சமீபத்தில் 207 மைல் வீதமும் மோட்டோர் ஓட்டிப் புகழ் பெற்றார்கள். இவர்கள் எல்லாரையும் தோற்கடிக்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் மிஸ்டர் பிராங் லாக்கார்ட் என்பார், டெய்டோனு கடற்கரையில் சென்ற சில காலமாக அப்பியாசம் செய்து கொண்டிருந்தார். சென்ற பிப்ரவரி 3உ இவர் இவ்வாறு வெகு வேகமாகப் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில் வண்டி திடீரென்று மேலே கிளம்பி ஒரு குட்டிக்கரணமடித்துக் கடலில் தலை கீழாய் விழுந்ததாம். லாக்கார்ட் தற்செயலாக உயிர் தப்பினாராயினும் மோட்டார் துகளாகிவிட்டது. இந்த விபத்து நேர்ந்த சமயத்தில் வண்டி மணிக்கு 225 மைல் வேகத்தில் போயிருக்கலாமென்று மதிப்பிடப்பட்டது. சிற்க, மிஸ்டர் லாக்கர்ட் இந்த விபத்தினுல் சோர்வுற்றுத் தமது முயற்சியைக் கைவிடாமால் வேறொருமோட்டாரைக் கொண்டு அப்பியாசஞ் செய்யத் தொடங்கினர் இம்மாதம் 25உ அவர் 200 மைல் வேகத்தில் மோட்டார் ஓட்டிக்கொண்டிருக்கையில் திடீரென்று வண்டி கட்டுக்கடங்காமல் போய், சுறசுறவென்று சில முறை சுழன்று ஆகாயத்தில் எழும்பிச் சில குட்டிக்கரணங்கள் அடித்துக் கீழே விழுந்ததாம். தரையில் வேகமாய் எறியப்பட்ட லாக்கர்ட் அந்தக்கணத்திலேயே உயிர் துறந்தாராம். —நவசக்தி.

---

## நூல்களைப்பற்றிய குறிப்பு.

### சித்திரம்.

கொழும்பிலிருந்து மூன்று மாதங்களுக்கு ஒருமுறை புத்தகரூபமாக வெளிவரும் சித்திரம்" என்னும் பத்திரிகையின் 8-ம் இதழ் வரப்பெற்றோம் இதில் அரிய விஷயங்கள் வெளிவந்திருக்கின்றன இதன் முதலாம் பக்கத்தில் ஒரு கிராம வேடிக்கைச்சித்திரத்தின் படம் அழகுற அமைக்கப்பட்டிருக்கிறது இதன் வருஷ சந்தா 1-க்கு இலங்கை, இந்தியா முதலிய இடங்களுக்கு தபாற்கூலி யுட்பட சதம் 50, சிங்கப்பூர், தென் ஆபிரிக்கா, செட்டில்மென்ட் முதலிய இடங்களுக்குத் தபாற்கூலி யுட்பட சதம் 75,

### குமரன்,

காரைக்குடியிலிருந்து வெளிவரும் குமரன் என்னும் பத்திரிகையின் ஆண்டு மடல் வரப்பெற்றோம் இதன்கண் மலாய்நாட்டிலுள்ள அழகிய கோயிற் படங்களும், அறிஞரால் எழுதப்பெற்ற சிறந்த வியாசங்களுங் காணப்படுகின்றன கற்பனைக்கேற்ற சில விநோதப் படங்களும் இதில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு மடல் புஸ்தக ரூபமாகச் சிறந்த காகிதத்தில் அழகுற அச்சிடப்பட்டிருக்கின்றது. இதன்கணுள்ள "சமய உணர்ச்சி" என்னும் வியாசத்தின் ஒருபாகத்தை இந்நறைப் பிரசுரத்தில் பிறிதோரிடத்தில் பிரசுரித்திருக்கின்றேம். இதன் விலை ரூபா ஒன்றேகால்

குறித்த "சித்திரம்" "குமரன்" என்னும் பிரதிகளை யனுப்பிய ஆசிரியர்கட்கு அவற்றின் பொருட்டு மனமுவந்த நன்றி கூறுகின்றேம்.

## சமய உணர்ச்சி.

உலகப் பொருள்கள் உயிருள்ளனவும் உயிரில்லனவும் என இருவகைப்பட்டுக் காணுகின்றன. உயிருள்ள பொருள்களிடத்து, அறிவும் அன்பு நீக்க முயற்சியும், இன்ப வேட்கையும் பொருந்தியுள்ளன. உயிரிலாப் பொருள்கள் பெரிய யந்திரங்கள்போல் மிக்க வலிமைபெற்றிருப்பினும், அவற்றினிடத்து இத்தன்மைகள் இருக்கக் காண்கிலோம். இவ்வகையில் ஒரு சிறிய புழுவும் மிகப் பெரிய பீரங்கியினுஞ் சிறந்ததே. உயிர்களின் இன்ப நாட்டம் அவற்றிற்குற்றுள்ள கட்டு நீக்கத்தைத் துணைக்கொண்டு நிகழ்கின்றது. இப்படிக் கட்டினின்று விடுபடு முயற்சியை எல்லாப் பிராணிகளும் இடைவிடாது செய்துவருகின்றன. இஃதே சமயஉணர்ச்சியின் மூலமாகின்றது.

அறிவுடை யொருவன் தன்னுடம்பை உற்று நோக்கின், அதனிடத்து, நிலம், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐம்பெரும் பூதங்களின் சிறு பகுதிகள் வேற்றுருவடைந்தோ தனித்தோ இருப்பதை உணர்கின்றான். உடம்பில் இப்படிக் காணும் ஒவ்வொரு பூதப்பகுதிக்கும் ஆதாரமாக உடம்பிற்கு வெளியே அவ்வப் பூதத்தின் அளப்பரும் பகுதியுள்ளது. உடம்பில் நம் பூதச் சிறு பகுதிகள் காணப்படுவதோடு, அதில் வாழும் உயிரிடத்தும் அறிவும், ஆற்றலும், அன்பும், இன்பும் மிகக் கட்டுப்பட்டநிலையில் இருப்பதும் தெரிகின்றது, இவற்றிற்கும் ஆதாரமாய்ப் பேரறிவும், பேராற்றலும், பேரன்பும், பேரின்பும் உயிருக்கப்பாலாய் இருத்தல் கூடுமே என்னும் ஓர் ஐயம் தோன்றுகின்றது. அங்ஙனம் கட்டிலடங்கா அறிவாற்றல்களோடு கூடிய பொருளொன்று ளதென்று கொள்ளப்படின் அதுவே கடவுட் பொருளென் றுணரப்படும். தமது கட்டுக்களை நீக்க விரும்பும் உயிர்கள், இயல்பாகவே கட்டுகளொன்றுமில்லாத கடவுளின் துணையை நாடல் வியப்பன்று. என்னை இறைவனருளை உயிர்கள் நாடல் இயல்பேயாகின்றது. இவ்வாற்ருல் கடவுள் வழிபாட்டிற்குத் தோற்றுவாய் காண்கின்றது,

இத்தகைய பெரிய பொருளினிருப்பை மக்கள் பல்லாயிர ஆண்டுகளாகவே பலவகைகளில் உணர்ந்து வந்துள்ளார்கள். இயற்கையில் ஞாயிறு, திங்கள்,விண்மீன்களின் புடைபெயர்ச்சியும், தடவரை, கனைகடல், பேரியாறு முதலியவற்றின் தோற்றமும், புயல்காற்று, பூமியதிர்ச்சி முதலிய கொடுநிகழ்ச்சிகளின் வன்மையும் ஆதிமக்களுக்கு வியப்பையும் அச்சத்தையும் விளைவித்தன. முதலில் அவைகளை வெவ்வேறு கடவுளர்களின் வேலையென அவர்கள் கருதியிருக்கலாம். பின்னர், அவை யாவும் ஒரே அறிவுடைப் பரம்பொருளின் சத்தி வெளிப்பீடென்று தெளிந்திருக்கலாம். அத்துணை ஆற்றலுடைய தெய்வங்களை வணங்கி, அவற்றால் துன்பமுறாமல், வேண்டிய இன்பங்களைப் பெற முயன்றனர். இந்நிகழ்ச்சி சரிதகாலத்தும் இக்காலினும்கூடத் தொடர்பாய்ப் பல மக்களிடையே நிகழ்ந்து வருகின்றது. முழுமுதற் கடவுளொருவரே உளர் என்னு முண்மை மன் பதைகட்குத் தெரிந்து பல்லாயிர ஆண்டுகளாகியும், தேவதேவனுஞ் சிவபெருமானைத் தேரிலேற்றிவிட்டு, அத்தேர் தெரு முடுக்குகளில் தடைப்பட்டு நிற்குங்கால் கறுப்பனுக்காடு வெட்டினுலன்றி அவன் தேரோடவொட்டானென்னு நம்பிக்கையோடு ஆடுவெட்டும் ஏழை மக்கள் இன்னும் எத்தனையோபேர் இருக்கின்றனரன்றே?

அச்சத்தில் தொடங்கும் வழிபாடு நாளடைவில் அன்பின்வழித்தாய்த் தூய்மையடைகின்றது. உலகசரித்திரத்தைப் பார்க்குங்கால் பல்வேறு நாடுகளினும் பொதுவாக இம்முறையிற் சமய உணர்ச்சி வந்திருக்கும் உண்மை தெரியவருகிறது. தன்னை, நோய், இயற்கையுற்பாத முதலியன துன்புறுத்த விடவேண்டாமென்றும், பல்வேறு போகங்கள் தனக்கு வேண்டுமென்றும், இயற்கைப்பொருள்கள் பலவற்றில் மனிதன் தன்னறிவு வளர்ச்சிக்கேற்பக் கடவுளைக் கற்பித்து வணங்கிக் குறையிரந்து வந்துள்ளான்.

தன்னின்மேம்பட்ட ஒரு பரம்பொருளின் அருளால் பாசவீடும் பேரின்ப வாழ்வும் பெற வேண்டுமென்னும் சமயவுணர்ச்சி தற்கால வாழ்க்கையில் மக்களறிவினின்றும் அடிக்கடி மறைந்துபோகின்றது. ஓய்வொழிச்சலில்லா உலக வியாபாரமும், செல்வச் செருக்கும், நெஞ்சத்தவலமில்லாக் கயவர் கூட்டுறவும் சில காரணங்களாம். ஆனல், நோய், வறுமை, தோல்வி, அவமானம் முதலிய உருவங்களில் அடிக்கடி துன்ப அலை மோதுவதாலும் மரண நிகழ்ச்சி நான்தோறும் கட்புலனுவதாலும், நல்லாரிணக்கத்தாலும் சமயவுணர்ச்சி மீண்டும் உரம்பெற்றெழுகின்றது. சமயவுணர்ச்சி முறுகி வளர, அதன்வழிச் செல்லும் ஆன்மாவுக்குப் பலவித தடைகள் உண்டாவதியல்பு. இதன் விவரத்தை மணிவாசகப்பெருமான் தனது "போற்றித் திருவகவ"லில் இனிது விளக்கியுள்ளார். ஆங்கிலத்திலுள்ள "Pilgrim's Progress" என்னும் ஆன்ம யாத்திரைக்கதையும் ஈண்டு கருதத்தக்கதே.

பாழ்த்த கருமங்கள் போராடுவதால் சமய மேனெறியிற் செல்லு முயற்சியை நெகிழவிடாது மேன்மேற் சென்று அப்பாலுக் கப்பாலை யறிந்தின்புற்றுப்பாடிய ஆரிருர் பலருளர்; மேற்குறித்த மணிவாசகப் பெரியார், தாம்பெற்ற இன்பம் சொல்லுற்தரத்ததன்றெனச் சொல்லி, எழுதவரிய சொல்லோவியத்தால் அவ்வனுபவப்பயனை எழுதிக் காட்டியிருப்பதை ஒரு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இவர் இறைவனை வாழ்த்தி வணங்கியதெல்லாம், பொன்னும் பொருளும் போகமும் வேண்டியன்று. மற்றெது கருதியோ எனின் "பாழ்த்த பிறப்பறுத்திடுவான் யானு முனைப் பரவுவனே" என்று அவர் பதிலுரைப்பர். இத்தகைய சமய உணர்ச்சியின் முதிர்ச்சியால் தனிப்பெருங் கடவுளோடு சார்ந்து நிற்கவல்ல சான்றோர் பலரையுடையதாகவே அதுவே சாலச்சிறந்த நாகரிகமுடையதென நன்கு மதிக்கத்தக்கதாம்.

(வரும்.)

---

## தேகவியோகம்.

**கொக்குவில் கிழக்கு வேலு கந்தையா என்பவர் சென்ற 11உ வெள்ளிக்கிழமை 10 மணியளவில் தேகவியோகமாகிவிட்டனர். இவர் ஓர் சிவதொண்டன். இவரைப் பிரிந்து துயருறும் சுற்றமித்திராருடன் எம் அநுதாபமும் இருக்கின்றது.**

---

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

———:o:———

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் கொட்டடி மா. கு. தெண்டாயுதபாணியிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்தவலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

| இல. | உ. | ரூ. | ச. | நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|
| 1927-ம்ஆ பெப்ரவரிமீ | | | | |
| ‹5584 | 2 | 10 | 03 | மு. சின்னவன் கொட்டடி குவளைக்கடுக்கன்2 |
| 5744 | 6 | 25 | 03 | வே. பொன்னுத்துரை சிவியாதெரு சிறுகாப்பு 2 |
| 5824 | 9 | 13 | | வே. ஐயம்பிள்ளை நயினுதீவு மோதிரம் 1 |
| 5874 | 11 | 17 | 39 | யக்கோ கவரியல் நவாலி கல்மோதிரம் 1 |
| 6016 | 15 | 20 | 03 | நா. சின்னுச்சி மானிப்பாய் கூடு 1 பதக்கம் 1 |
| 6218 | 22 | 22 | 50 | கவுரியல் சவுரி கரையூரின் அட்டியல் 1 |
| 6310 | 25 | 8 | | வி. முத்து கொட்டடி தூக்கணம் 1. |
| 1927-ம்ஆ மார்ச்சுமீ | | | | |
| c6669 | 8 | 25 | 03 | மு. செருமதார் சோனகதெரு பட்டணக் காப்பு 2 |
| 6844 | 15 | 13 | | ம. மதனுசாய்பு செம்மாதெரு மோதிரம் 1 கவுத்தோர் 1 |
| 6897 | 16 | 7 | | ப. சாகுல்ஹமீது, சோனகதெரு மணிக்கோர்வை 1 |
| 7126 | 25 | 25 | | செ. மீருசாய்பு சோனகதெருபொன்சவடி 1 |
| 7200 | 28 | 60 | | அ. வாரித்தம்பி ஆனைப்பந்தியடி பாவக்கொட்டைமாலை 1 |
| 7202 | 28 | 350 | 03 | A. O. முகைதின் பறங்கித்தெரு எழு பட்டு மணி1 ஆறுபட்டுமணி1 |
| 7225 | 28 | 50 | | மு. செருமுகைதின் சோனகதெரு ஐந்து பட்டுமணிக்கோர்வை 1 |
| 1927-ம்ஆ ஏப்பிரல்மீ | | | | |
| c7520 | 8 | 100 | 03 | க. இராமலிங்கம் பழைகுவளை 2 பட்டணக் காப்பு 2 அட்டியல் 1 |
| 7836 | 18 | 9. | | சி. இராமலிங்கம் கொட்டடி மோதிரம் 1 |
| 7939 | 20 | 40 | | ச. மரியாம்பிள்ளை, நாவாந்துறை பீலிக்காப்பு 2 |
| 7960 | 21 | 20 | 03 | கு. முருகேச கடையடி கைச்சங்கிலி 2 |
| 8047 | 23 | 75 | 03 | இ. சுப்பிரமணியம் சிப்பித்தறை சிறுகாப்பு 6 மோதிரம்1 கவுத்தோர் வெள்ளி அரைஞாண் கொடி 1 |
| 8231 | 29 | 70 | 63 | வி. ச. முகம்மது அப்துல்காதர் சோனகதெரு கலிற்றுத்தாலி 1 |
| 1927-ம்ஆ மேமீ | | | | |
| ‹8350 | 2 | 55 | 03 | கந்தர் சமசிவாயம் ஒலும்புத்துறை பதக்கம்1 பட்டணக்காப்பு2 |
| 8386 | 4 | 125 | 03 | C. K. சடாசிவம் பறங்கித்தெரு செட்டிப்புரணட்டியல் 1 கல மோதிரம் 1 |
| 8423 | 5 | 30 | | வே. இராமலிங்கம்கடையடி அட்டியல் 1 |
| 8669 | 11 | 8 | 03 | க. சின்னன் கரையூர் பொன் கவுத்தோர் 1 |
| 8706 | 13 | 45 | 03 | ச. வெகாவி கொட்டடி சங்கிலி அட்டியல் 1 |

விற்பனவு:— விபவருஷ வைகாசிமீ 25-ந் திகதிக்குச்சரியான (7—6—28) வியாழக்கிழமை காலை 8 மணிதொடக்கம் மேற்பட்ட நகை பிரசித்தமாக யிருந்த பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்,

(Mir. 1210.)

## தலைமைக்காரரை ஏசினதற்குச் சிறைத்தண்டனை.

சென்ற 9உ புதன்கிழமை மல்லாகம் கோட்டில் கடேசன் என்பவன் சுன்னாகம் பொலிஸ் விதானையாகிய ஸ்ரீ சிவசம்புவையும், தெல்லிப்பழைப் பொலிஸ் விதானையாகிய ஸ்ரீ பின்னையினரையும் உதாசின வார்த்தைகளால் ஏசினனெனவும், குடித்துக் குழப்பஞ் செய்தானெனவும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தான். நீதிபதியினுடைய அனுமதிப்படி அவனைச் சோதித்த டக்டர் கந்தையா அவர்களின் வாக்குமூலம் கேட்கப்பட்டது. டக்டர் அவன் அப்பொழுது குடித்திருக்கவில்லையெனவும், கள் மணம் இருந்ததெனவுங் கூறினர். நீதிபதி தீர்ப்புச் சொல்லுமுன்னர் ஒரு பிரசித்தமான இடத்தில் உதாசின வார்த்தைகளை அவன் உபயோகித்தானெனக் குற்றச்சாட்டை மாற்றி அவனுக்கு மூன்றுமாதக் கடூழியச்சிறை விதித்தனர். எதிராளி தன் சாட்சிகள் கோட்டுக்கு வரவில்லையெனவும், ஆகையால் தானே தனக்காகச் சாட்சிசொல்லவேண்டி ஏற்பட்டதெனவுங் கூறினன். சாட்சிக் கூடத்தை விட்டிறங்கியவுடன் நீதிபதி முன்னிலையில் சுன்னாகம் பொலிஸ் விதானைக்கு அடித்தான். அவன் மறுபடியும் அடித்ததற்கும் கோட்டை அவமதித்ததற்குமாகக் குற்றஞ் சாட்டப்பட்டான். நீதிபதி கண்ட சாட்சியாயிருந்து வாக்குமூலங் கொடுக்கவேண்டியவரா யிருந்ததினாலே அவர் அந்த வழக்கை விசாரிக்கக் கூடாதெனவும், அந்த வழக்கை விசாரிப்பதற்கு வேறுநீதிபதியிடம் அவ்வழக்கை அனுப்பும்படியும் எதிராளி கூறினன். நீதிபதி அதற்கிடங்கொடாது தாமே விசாரிக்கவேண்டுமெனக் கூறினர். பின்னர் எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ள அடித்ததற்கு ஆறுமாசச் சிறையும், கோட்டை அவமதித்ததற்குரூபா25 அபராதமும் அப்பணம் இறுக்கத் தவறினால் 1 மாதச் சிறையும் அவனுக்கு விதிக்கப்பட்டது.

## இந்துசாதனப் பத்திராதிபர் அவர்களுக்கு.

ஐயா!

சென்ற 15—2—28-ல் வெளிவந்த இந்துசாதனத்தில் 5—2—28-ல் கந்தரோடை ஆங்கில வித்தியாசாலையில் "வேளாளர் மகாநாடு" என்னும் ஓர் சபை கூடிற்றென்றும், அதில் ஒரு சாதியத்திலுள்ளாரைத் தாழ்த்தப்பட்டவர்களென்றும், அவர்களுடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்றும் யோசித்ததாகவும் கூறப்பட்டுள்ளது. பின் 2—4—28ல் வெளிவந்த 78-ம் இலக்க இந்துசாதனத்தில் "சைவசுருமவிருத்திச்சங்க" காரியதரிசி திரு தி. சுப்பிரமணியம் என்றொருவர் மேற்கூறியதை மறுத்து 8—3—28ல் வெளிவந்த 69 ம் இலக்க இந்துசாதனத்தில் தோற்றிய சபையின் பெயரது வேறென்றும், அதன் நோக்கமதுவேறென்றும் கூறியிருக்கின்றர். அன்றியும் 9—4—28ல் 78ம் இலக்க இந்துசாதனத்தில் மேற்குறித்த காரியதரிசி 13-2-28ல் 62ம் இலக்க இந்துசாதனத்தில் தோற்றியவை தவறென்றும் எழுதியிருக்கிறர்.

ஆகையால், பத்திராதிப! 62ம் இலக்க இந்துசாதன பத்திரிகையில் தோற்றிய மகாநாட்டுச் சமாசாரம் எவ்வாறு தோற்றியதென்று வெளியிடும்படி வேண்டுகின்றர்.

வாவெட்டி, இங்ஙனம்,
24—4—28. உண்மைவிரும்பி.

## அராலி வடக்குச் சைவசமய விருத்திச் சங்கத்தின் இரண்டாம் வருட நிறைவு விழா.

நிகழும் விபவ ஞு சித்திரைமீ கஉ (29.4.28) ஞாயிற்றுக்கிழமை பின்பகல் 4 மணியளவில் அராலிவடக்கு ஸ்ரீகணேசவித்தியாசாலை மண்டபத்தில் மேற்படி சங்கத்தின் இரண்டாம் வருட நிறைவுவிழாக்கொண்டாட்டம் பிரமஸ்ரீ வை. துரைச்சுவாமி அவர்கள் அக்கிராசனராய் வீற்றிருக்கத் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது.

முதலாவது மேற்படி சங்கத்தின் அறிக்கைப்பத்திரம் காரியதரிசி ஸ்ரீ இ. கதிரேச அவர்களால் வாசிக்கப்பெற்றது.

இரண்டாவது வரவு செலவு கணக்குப் பத்திரம் தனாதிகாரி ஸ்ரீ சே. இராமலிங்கம் அவர்களால் வாசிக்கப்பட்டுச் சபையோரின் அங்கீகாரம் பெற்றது.

மூன்றாவது தேவாரம், சங்கீதம், ஒழுக்கம், நியமம், சமயபாடத்திறமை முதலியவற்றில் திறமையாய்ந்த பிள்ளைகளுக்கு விசேட பரிசுகளும், மற்றைய சகலபிள்ளைகளுக்கும் அவர்கள் தகுதிக்கேற்ற பரிசுகளுங் கொடுக்கப்பெற்றன.

நாலாவது சில பிள்ளைகளால் தேவாரம் சங்கீதத்திறமையோடு பாடப்பெற்றது. அதனைக்கேட்டு யாவரும் மனமகிழ்ந்து போற்றினர்.

பின் ஸ்ரீ கு. குமாரசூரியர் அவர்களாலும், ஸ்ரீ க. முத்தையாபிள்ளையவர்களாலும் குறிப்புரைகள் கூறப்பட்டன. அதன்பின் அக்கிராசனர் எழுந்து சங்கவளர்ச்சியையும் பிள்ளைகளின் சமயத் தேர்ச்சியையும் ஒழுக்கத்தையும் எடுத்துக் கூறிப்போற்றினர்.

ஈற்றில் சங்க உப அக்கிராசனர் ஸ்ரீ நி. சரவணமுத்து அவர்களாலும் ஸ்ரீ இ. இரத்தின உபாத்தியாயரவர்களாலும் சபையோருக்கு வந்தனம் கூறப்பெற்று 6 மணியளவில் தேவார பாராயணத்துடன் பூர்த்தியாயிற்று. மேலும் சபையோரனைவரும் சிற்றுண்டி தேநீர் அமிர்தரசம் முதலியன அருந்திச் சங்கத்தைப் புகழ்ந்து போற்றி ஆசீர்வதித்துச் சென்றனர்.

சுபமஸ்து. —சடித.

## "செய்தார்வினை செய்தாருடன்".

என்பதை விளக்க ஓர் சரித்திரங் கூறுதும்:— கார்ப்பாசபுரி என்னும் பெயரையுடைய நகரத்திலேயுள்ள ஓர் காட்டிலே ஒரு மகான் தவஞ் செய்துவந்தார். அவர் இடையீடின்றி எப்பொழுதும் மேலே காட்டிய "செய்தார்வினை செய்தாருடன்" என்பதையே தமக்கு வேதமந்திரமாகச் செபித்துக்கொண்டு வந்தனர். இவர் அவ்வூர்க் காட்டில் வசித்துவருவதை அவ்வூரையாளும் அரசன் கேள்விப்பட்டு அவரை நேரே காண ஆசைகொண்டு தன்னுடைய ஏவலாளர்களை யனுப்பி அந்த மகானை யழைத்துவரும்படி கட்டளைசெய்தான். ஏவலாளர் அரசன் கட்டளையைச் சிரசில் தரித்து மகானை யழைத்துவரும்படி காட்டிற்குப் போனார்கள். அங்கே அந்த மகானைக் கண்டு கும்பிட்டு, ஐயா பெரியவரே! தங்களை எங்கள் இராசா அழைத்துவரச் சொன்னார் என்று சொல்ல, அதற்கு அவர் உங்கள் இராசாவை வரச்சொல்லுங்கள் என்று சொன்னார். அதைக் கண்ட ஏவலாளர்கள் கோபங் கொண்டு அந்த மகானுக்குத் துன்பஞ் செய்யத் தொடங்கினர். உடனே அந்த மகான் எனக்கு ஒரு துன்பமுஞ் செய்யவேண்டாம். உங்கள் இராசாவிடத்திற் போய் உங்களை நேரில் வரச்சொன்னாரென்று சொல்லுங்களென்று சொல்ல, அவர்கள் நகரத்திற்கு வந்தனர். இவர்களைக் கண்ட அரசன் ஏன் அவரைக் கூட்டிவரவில்லையென்று கேட்க, அவர் உம்மை நேரில் வரச்சொன்னாரென்று சொல்ல, அரசன் அப்படியா காரியம், நானே போய் அழைத்துவருகிறேன் என்று சொல்லிக் காட்டிற்குச் சென்றார். அங்கே தவஞ்செய்யும் மகானைக் கண்டு வணங்கி நிற்க, மகான் அப்பொழுதும் "செய்தார்வினை செய்தாருடன்" என்ற மந்திரத்தையே சொல்லிக்கொண்டிருந்தார். அரசன் இந்த மந்திரத்தைச் சோதிக்க வேண்டும், இவருக்கு நாம் வினைசெய்துபார்ப்போம் என்று எண்ணமுடையவனாய் மகானைப் பார்த்து, சுவாமி! இன்று எனது வீட்டிற்கு வரவேண்டுமென்று வேண்ட அவர் வருவதாகச் சம்மதித்து அப்பொழுதும் அந்த மந்திரத்தைச் செபித்துக்கொண்டே செல்லலானார். இருவரும் அரசன்வீட்டிற்குச் சென்றவுடன் அரசன் தக்க மரியாதை செய்து தன் மனையாளை யழைத்து மகானுக்குச் சமையல் செய்யும்படி கட்டளைசெய்து ஒவ்வொரு பதார்த்தத்திலும் விஷம் கலந்து வைக்கும்படி செய்வித்தார். அதன்படி செய்து முடிந்தவுடன் மகானைப் பார்த்துச் சாப்பாட்டிற்கு இலை போடப்பட்டிருக்கிறது, வாருங்களென்று கூப்பிட, அப்போ அவர் நான் இலைபோட்டுச் சாப்பிடுகிற வழக்கமில்லையென்று சொல்ல, இலைபோட்டுச் சாப்பிடாவிட்டால் கைபோட்டுச் சாப்பிடலாம் வாருமென்று சொல்ல, மகான் அரசனின் முகத்தை நிதானித்துப் பார்த்தார். அடடா இம்மூடனிடத்திலிருந்து திரும்பிப் போவது கடினமாயிருக்குமென்று தன் மனதி லெண்ணிக்கொண்டார். உடனே அவர் "அகத்தினழகு முகத்திற் றெரியும்" என்றபடி மகான் முகக்குறிப்பை யறிந்த அரசன் தன் மனதிற்றானே யெண்ணுகிறான்:—

இவரை நாம் சோதிக்க எண்ணினேம்; இவன் நம்மைச் சோதித்துவிடுவான்போலிருக்கிறது என்று நினைத்து, ஒரு தாதியை யழைத்துத் தங்கத் தாம்பாளமொன்றில் விஷங் கலந்த பதார்த்தங்களைக் கொண்டுவந்து மகானுக்கு முன்னே வைக்கும்படி கட்டளை செய்ய அவள் அதன்படி செய்தாள்.

அதன்பின் அத் தாம்பாளத்தில் அனேக திரவியங்களை வைத்து உபசரித்தான். இவற்றையெடுத்துக்கொண்டு மகான் காட்டிற்குச் சென்றார். அங்கே விடியற்காலையிலிருந்து ஆகாரமின்றி வேட்டையாடிக் களைத்திருந்த மேலே சொன்ன அரசனுடைய மகனைக் கண்டார். அவன் வருந்திநிற்குஞ் சமயத்தில் மகான் தான் கொண்டுபோன தாம்பாளத்தையும் அதிலிருந்த உணவுகளையும் அவனிடத்தில் கொடுத்துப் பசியை நீக்கிக்கொள் என்று சொல்லிப் போனார்.

களைத்திருந்த அரசகுமாரன் விஷங்கலந்த சோற்றை ஒருபிடி சாப்பிடவும் உடனே இறந்துவிட்டான். இந்த சங்கதியை அரசன் கேள்விப்பட்டு அங்கேவந்து பார்க்கும்பொழுது முன்னே மகானுக்கு விஷங்கலந்தனுப்பிய தாம்பாளத்தையும் உணவையுங் கண்டு வருத்தமுற்று, ஐயோ மகனே உன்னைக்கொல்ல நானே யமனாயிருந்தேன் என்று புலம்பித் தானும் இறந்துவிட்டான்.

ஆகையால் இத்தீமையாகிய வினைகளைச் செய்யாமலிருப்பதற்குத் தெண்டிப்போமாக.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோவில்,
சுதுமலை.

---

## உபாத்திமார் தேவை.

யாழ்ப்பாணம் முஸ்லீம்தெரு வில்லுன்றி ரோட்டிலிருக்கும் முஸ்லீம் தமிழ்ப் பாடசாலைக்கு 2-ம் வகுப்பு அல்லது 3-ம் வகுப்புத் தராதரப்பத்திரம் பெற்ற ஓர் தலைமை உபாத்தியாயர் தேவை. விருப்பமுள்ளவர்கள் ஆனிமாதம்முதற்றிகதிக்கு முந்தியே மேற்படி பள்ளிக்கூட மானேஜர் எஸ். எம். அபூபக்கர் பிறக்டர் அவர்களிடம்பேசி ஒழுங்குசெய்துகொள்ளலாம்.

யாழ்ப்பாணம்,
10—5—28.
Mis. 1206.

---

குறைந்தவிலைக்குப் புத்தகம் வேண்டுமாயின் முற்பணமனுப்ப முந்துங்கள்.

## திருக்குறள்.

கண்கவரும் உயர்ந்த பதிப்பு;
கையடக்கமானது.
(200 பக்கம்) வெளிவந்துவிட்டது.
ரூபா 1-க்கு 8 பிரதிகள்.

குறிப்பு:—பிரதிகள் ரூபா 1-க்கு குறையாமல் முற்பணமனுப்புவோர்க்கே அனுப்பப்படும்.

15—6—28-ல் வெளிவரும்

## பன்னிரு திருமுறைத் திரட்டு.

கிரவுன் அளவு 250 பக்கம் படங்களுடன்
31—5—28-க்குள்
முன்பண மனுப்புவோர்க்கே
ரூபா 1-க்கு 3 பிரதிகள்.

குறிப்பு:—31—5—28-க்குப்பின் ரூபா1-க்கு 2 பிரதிகள் வீதம் விற்கப்படும்.

15—7—28-ல் வெளிவரும்

## திருவாசகம்.

இது குறள்போலக் கையடக்கமான அழகிய பதிப்பு.
250 பக்கம்.
15—6—28-க்குள்
முன்பணமனுப்புவோர்க்கே
ரூபா 1-க்கு 5 பிரதிகள்.

குறிப்பு:—15—6—28-க்குப்பின் ரூ 1-க்கு 4 பிரதிகள் வீதம் விற்கப்படும்.

பொதுக்குறிப்பு:-ரூ 1-க்குமேல் 5, 10, 20 ஆக முன்பணமனுப்பவேண்டும்.

எல்லாவற்றிற்கும் தபாற்செலவு வேறு.

திருநெல்வேலியில் ரூபா 1-க்கு 2 அணாவீதம் ரயில்செலவு வாங்கப்படும்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்
6, பவளக்காரத் தெரு, சென்னை.

தலைமை நிலையம்,
திருநெல்வேலி.
(Mis. 1207)

---

## சைவத் திருமுறை பன்னிரண்டு.

அழகிய திருவுருவப்படங்களுடன்.

இப்பதிப்பின்கண் அற்புதப்படங்கள், அருஞ்சொல்லகராதி, அருஞ்சொற்றொடர்க்கோவை, பதிகவரலாறு, தலவரலாறு முதலியன வெளிவரும்.

சம்பந்தர் தேவாரமும், அப்பர் தேவாரமும் மிக்க அழகுடன் வெளிவந்துவிட்டன.

12-திருமுறைகளுக்கு
முன்பணமனுப்புவோர்க்குப்
பெரிதும் லாபமாகும்.

| திருமுறை. | கலிக்கா. | செக்சின்பட்டு. |
|---|---|---|
| 1-3 சம்பந்தர்தேவாரம் (பகுதி க) | ரூ. 7 8. | ரூ. 8 0. |
| 4-6 அப்பர்தேவாரம் (பகுதி உ) | ரூ. 6 8. | ரூ. 7 0. |
| 7 சுந்தரர்தேவாரம் (பகுதி ௩) | ரூ. 5 8. | ரூ. 6 0. |
| 1-7 தேவாரமுழுதும் (3 பகுதிகள்) | ரூ. 16 0. | ரூ. 17 8. |
| 1-12 12-திருமுறைகளும் (6 பகுதிகள்) | ரூ. 2[illegible] 0. | ரூ. 28 0. |

சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
லிமிடெட்,
6, பவளக்காரத்தெரு.

தலைமை: தெற்குப் புதுத்தெரு,
திருநெல்வேலி.
Mis. 1208.)

---

## விளம்பரம்.

கீழே குறிக்கப்பட்ட மரங்கள் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் உதவி வனபரிபாலனாவர்களால் பின்வருஞ் சொல்லப்படுமிடங்களில் விற்கப்படும்:—

( ) யாழ்ப்பாணம் மரக்காலையில் 1928-ம் ஆண்டு ஆனிமாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு விற்கப்படும் மரங்கள்.

I. 100 பாலைமரங்கள்
II. 10 முதிரைமரங்கள்
III. 3 பொன்னை முருங்கைமரங்கள்
IV. 6 தோன்முதிரைத்துண்டுகள்.

( ) மாங்குளம் மரக்காலையில் 1928-ம் ஆண்டு ஆனிமாதம் 5-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு விற்கப்படும் மரங்கள்:—

I. 23 முதிரைமரங்கள் = 146 கன அடி
II. 2 பாலை ,, = 143 ,, ,,

( ) ஒட்டுசுட்டான் மரக்காலையில் 1928-ம் ஆண்டு ஆனிமாதம் 6-ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு விற்கப்படும் மரங்கள்:—

I. 20 பாலைமரங்கள் = 275 கன அடி
II. 47 முதிரை ,, = 225 ,, ,,
III. 27 சமண்டலை ,, = 175 ,, ,,
IV. 2 யாவறணை ,, = 23 ,, ,,
V. 1 பொன்னைமுருங்கை ,, = 15 ,, ,,

ஏனைய விபரங்களை 1928-ம் ஆண்டு வைகாசி மாதம் 11-ம் திகதி வெளிவரும் 7,642-ம் இலக்க கேசற் பத்திரிகையிலுள்ள விளம்பரத்திற் காணலாம்.

J. D. SARGENT,
Conservator of Forests,
வனபரிபாலகர்.

வனபரிபாலனர் கந்தோர்,
கண்டி, 8—5—1928.
(G. 899.)

---

## சுப்பிரமண்ய ஜோதிடம்.

இந்தியா தேசமெங்கும்
தலைமைபெற்றுப் பிரகாசிக்கும்
ஜோதிடாலயம் இதுவே.

உங்கள் அதிஷ்டத்தை ஏன் தெரிந்துகொள்ளக் கூடாது. இன்றே யெழுதி உங்கள் அதிஷ்டத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.

உங்கள் எதிர்காலப் பலனைப்பற்றிய 6 கேள்விகளுக்குப்பதில் எழுத ரூபா 1-00. மேல் தனிக் கேள்விகளுக்கு அணா 4. ஒருவருஷப் பலன் எழுத ரூபா 2-00. கடிதம் எழுதும்போது உள்ள கோத்திரத்தையாவது ஜாதகக் குறிப்பையாவது தெரியப்படுத்தவேண்டியது. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

## சர்வஜய வசிகரணி.

தாயித்து 1-க்கு ரூபா 2—8—0

இது எல்லாவிதமான காரியங்களிலும் ஜெயமபெற்று வருவதுமன்றி செய்வினை போய் நல்வினை யுண்டாக்கும். எல்லாவிதமான காரியங்களிலும் அனுகூலப்படும்.

மானேஜர்,
ஸ்ரீ சிவசுப்பிரமண்ய
ஜோதிட நிலயம்.
(Q 103) திருத்தணி, சித்தூர்ஜில்லா.

---

## ஸ்தம்பன லேகியம்.

ஓர் புதிய யூனானிமுறை.

இந்த லேகியத்தை மிகவுஞ் சிரமப்பட்டு அரிய பல மூலிகைகளைக்கொண்டும் ஸாலாமிஸ்ரி, பஞ்சாப்மிஸ்ரி, ஸாருஜசான்மிஸ்ரி, பேசஜிதான்மிஸ்ரி, கீர்முள்ளி விரை, இஸ்கூல்விரை, ஸொசமபிசின, பேதானு முதலிய யூனானி சரக்குகளைக் கொண்டும், காமபுகளுக்கும் புருஷ ஜனனேந்திரியங்களுக்கும் வலுவைக்கொடுத்துக் கெட்டிப்படுத்தி ஸம்பூர்ணமான சுகத்தை அனுபவிக்கும்படியான சரீரதிடத்தைக் கொடுக்குமாறு அரிய முறையாய்ச் செய்யப்பட்டு இருக்கிறது. குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.

40 நாள் சாப்பிடக்கூடியது ரூ. 2—0—0.

அஸ்வினி
ஆயுர்வேத வைத்தியசாலை,
அக்காச்சேரி,
கொடவாசல் போஸ்டு,
(M 62) தஞ்சைஜில்லா.

---

வான்முகில் வழாதபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்,
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க,
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.